## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



ஒன்றிய அரசின்

## பொது விநியோகத் திட்டத்தில் ரூ. 69 ஆயிரம் கோடி மோசடி!

### மக்களவையில்- கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு கேள்வி!

புதுடெல்லி,மார்ச்.28-

உணவுப் பொருட்கள் வழங்கப்படும் பொது விநியோகத் திட்டத்தில் ரூ.69,000 கோடி அளவுக்கு மோசடி நடந்திருப்பதாகவும், ரூ.2,000 கோடி மதிப்புள்ள ரேஷன் அரிசி மற்றும் கோதுமை காணாமல் போய்விட்டதாகவும் சென்னை தினமலர் நாளேடு சென்ற 19 நவம்பர், 2024 அன்று பரபரப்பான செய்தி ஒன்றை வெளியிட்டது. இந்தச் செய்தி ஒன்றிய அரசின் கவனத்துக்கு வந்ததா? அப்படியானால் இந்த விஷயம் தொடர்பான உண்மைகள் என்ன? இந்த குற்றச் செயலுக்குக் காரணமானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனரா? என்ற விவரங்களைத் தெரிவிக்கக் கோரி டி.ஆர்.பாலு எம்.பி. கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு 26.3.2025 அன்று மக்களவையில் பதிலளித்த ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணை அமைச்சர் திருமதி நிமுபென் ஜெயந்திபாய் பம்பானியா அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

அது வருமாறு:

கண்டறியப்பட்ட பயனாளிகள் (Targetted beneficiaries)பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்களை வழங்கும் பொறுப்புக்கள் அனைத்தும் மாநில அரசுகளிடம் உள்ளது. மத்தியக் கிடங்கில் இருந்து உணவுப் பொருட்களை வெளியே எடுத்துச் செல்வதில் இருந்து இறுதியாக கண்டறியப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கும் வரையிலான இயக்க நடைமுறைகள் முழுவதையும் சம்பந்தப்பட்ட மாநில மற்றும் ஒன்றியப் பகுதி அரசுகள் செய்கின்றன. மத்தியக் கிடங்கில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்படும் (டேக் ஆஃப்) உணவுப் பொருட்களின் மொத்த அளவில், வழியில் போக்குவரத்தில்(Transit) உள்ளவை, அவசர காலக் கையிருப்பு (Buffer Stock) என பல்வேறு விதமான இருப்புக்களும் அடங்கும். ஆனால், இந்த நடைமுறையைச் சரியாக புரிந்து கொள்ளாமல், உணவுப் பொருட்களின் பொது விநியோகத்தில் மோசடி நடந்துள்ளதாக தவறான செய்தியை தினமலர் நாளேடு வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் உண்மை இல்லை. உணவு வழங்கல் திட்டத்தில் முறைகேடுகள், மோசடிகள் நடந்தால் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955இன் படி உரிய தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர், தி.மு.க. பொருளாளர் டி.ஆர். பாலுவுக்கு எழுத்துப்பூர்வமாக மக்களவையில் அளித்த தனது பதிலில் தினமலர் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துள்ளார்.

வளர்ந்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு

## நிதிப் பங்கீடு, ஒன்றிய அரசால் முறையாக வழங்கப்படுகிறதா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி,மார்ச்.28 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்கன் அவர்கள் 24 மார்ச் 2025 அன்று மக்களவையில், வளர்ந்து வரும் தமிழ்நாடு போன்ற தென்னிந்திய மாநிலங்களுக்கு, நிதிப் பங்கீடு, ஒன்றிய அரசால் முறையாக பகிர்ந்து அளிக்கப்படுகிறதா? என்றும் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும், பேரிடர் மேலாண்மைக்கும் நிதி வழங்கப்படுவதில் பாராபட்சம் காட்டப்படுவது ஏன்? என்றும் மாநிலங்களுக்கான நிதிப்பங்கீட்டை 50 சதவீதமாக உயர்த்த ஏதேனும் முயற்சிகள் உள்ளதா? என்றும், ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :-

அனைத்து மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசின் வரி வருவாயை பகிர்ந்து அளிப்பதில், அரசியல் சட்ட விதிகள் 280(3)(a)ன்படி, 15வது நிதிக்குழு மட்டுமே பரிந்துரை அளிக்க முடியும் என்றும், அதற்கு முந்தைய நிதிக்குழுவின் பரிந்துறையுடன் ஒப்பிடுகையில் பீகார், மகாராஷ்டிரா மற்றும்



ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு நிதிக்குழ கணிசமான நிதி உயர்வு அளித்துள்ளது என்றும், தமிழ்நாட்டிற்கு நிதி அளிப்பதில், 1000ல் 5 பங்குகள் அளவிற்கு மட்டுமே உயர்வு அளிக்கப் பட்டுள்ளது என்றும் இதுகுறித்து மாநிலங்கள் 16வது நிதிக்குழுவிடம் குறைகளை முறையிடலாம் என்றும் மக்களவையில் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு பேரீடர் மேலாண்மைக்கும், நிதிப் பங்களிப்பில் ஒன்றிய அரசும், மாநிலங்களும் இணைந்தே செலவிடப்படுகிறது என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்கன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

அரசு நிறுவனங்களின் முக்கிய பதவிகளுக்குள்ள தற்போதைய ரோஸ்டர் முறையானது

## விளிம்புநிலை சமூகங்களின் வாய்ப்பை தடுக்கிறது!

### மாநிலங்களவையில் - பி.வில்சன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி,மார்ச் 28 -

“அரசு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் துறையின் செயலாளர்கள் போன்ற முக்கிய பதவிகளில் விளிம்புநிலை சமூகங்கள் நுழைவதை தற்போதைய ரோஸ்டர் முறை தடுக்கிறது” என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் பி.வில்சன் பேசும் போது குற்றச்சாட்டினார்.

அரசு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் துறையின் செயலாளர்கள் போன்ற முக்கிய பதவிகளில் விளிம்புநிலை சமூகங்கள் நுழைவதைத் தடுக்க ஒன்றிய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் பின்பற்றப்படும் நியாயமற்ற ரோஸ்டர் முறை குறித்து மாநிலங்களவையில் பி.வில்சன் பேசியதாவது:

ஒன்றிய அரசு மற்றும் அதன் முகமைகளில் பொது வேலை வாய்ப்பில் பயன்படுத்தப்படும் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் ரோஸ்டர் இடஒதுக்கீட்டு முறை வேண்டுமென்றே மாற்றியமைக்கப் படுகிறது.

இந்த மாற்றங்களானது, எஸ்.டி., எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு பொது வேலைவாய்ப்பில் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சரியான பிரதிநிதித்துவத்தையும், அரசு நிறுவனங்களுக்கு அவர்கள் தலைமை பொறுப்பு வகிப்பதையும் திட்டமிட்டு பறித்துள்ளது.

வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, சமூக நீதிக்கான ஒரு கருவியாக இடஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் இந்த கொள்கையை செயல்படுத்துவதில் ரோஸ்டர் முறை ஒரு முக்கிய அங்கமாகும். இருப்பினும், 2.7.1997 தேதியிட்ட பணியாளர் மற்றும் பயிற்சித் துறை அலுவலக குறிப்பாணையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இடஒதுக்கீட்டு ரோஸ்டர் முறையானது அடிப்படையில் குறைபாடுடையது. இதே சிக்கல்கள் ஜனவரி 31, 2019 தேதியிட்ட அடுத்தடுத்த குறிப்பாணையிலும் தொடர்ந்தன.



இந்த முரண்பாடுகள், இட ஒதுக்கீட்டுப் பிரிவினருகான இடங்களைப் பறித்து இடஒதுக்கீடு அல்லாத பிரிவினருக்கு கூடுதல் பதவிகளை ஒதுக்குவதற்கு வழிவகுத்துள்ளன.

**இட ஒதுக்கீட்டினை தகர்க்கிறது!**

உதாரணமாக, 2019 குறிப்பாணையின் படி, 13 புள்ளி ரோஸ்டர் முறையில், 13 பதவிகளில் ( 1 பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவு உட்பட) 9 பதவிகள் இடஒதுக்கீடு அல்லாத பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டியது 6 பதவிகள் மட்டுமே.. அதன்படி 3 இடங்கள் கூடுதலாக நியாயமற்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு அனுமதிக்கப்பட்ட பதவிகள் மட்டுமே கொண்ட துறைகள் / நிறுவனங்களில் இரண்டுமே இடஒதுக்கீடு அல்லாத பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது இடஒதுக்கீடு பெற்றுள்ள பிரிவினருக்கான பிரதிநிதித்துவத்தை முற்றிலுமாக தகர்க்கிறது.

அரசியலமைப்பு

ஆணையை மீறுவதாகும்!

6 பணியிடங்கள் கொண்ட கேடரில் நியாயமாக அளிக்கப்பட வேண்டிய 3 இடங்களுக்கு பதிலாக 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

10 பணியிடங்களுக்கும் குறைவாக உள்ள சிறு கேடர்களில், 10 பதவிகளுக்கு சரியான விகிதாச்சாரமான 50.5% க்கு மாறாக 70% இடங்கள் இடஒதுக்கீடு அல்லாத பிரிவைச் சார்ந்தவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

6 பணியிடங்கள் கொண்டவற்றில், சரியான விகிதாச்சாரமான 50.5% க்கு மாறாக 83% பணியிடங்கள் இடஒதுக்கீடு அல்லாத பிரிவைச் சார்ந்தவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

3 பணியிடங்கள் கொண்டவற்றில், 100% பதவிகள் இடஒதுக்கீடு அல்லாத பிரிவைச் சார்ந்தவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இது இட ஒதுக்கீட்டை முற்றிலுமாக நீக்குகிறது.

நான் வழங்கும் இந்த தரவுகள் வெறும் புள்ளிவிவர முரண்பாடுகள் அல்ல; இடஒதுக்கீடு அளிக்கப்பட்ட பிரிவைச் சார்ந்தவரை ஒதுக்கி, இதுஒதுக்கீடு பெறாத பிரிவைச் சார்ந்தவருக்கு ஆதரவு கொடுக்கும் திட்டமிட்ட முயற்சியாகும். இது சமூக நீதிக்கான அரசியலமைப்பு ஆணையை நேரடியாக மீறுவதாகும்.

குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்ட முதல் ரோஸ்டர் புள்ளியானது, அனைத்து அரசு நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெறாத பிரிவைச் சார்ந்தவர்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்படுவது குரூப் A மற்றும் குரூப் B பதவிகளில் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓபிசி பிரிவினருக்கு உரிய பிரதிநிதித்துவம் மறுக்கப்படுவதை உறுதி செய்ய வழிவகுக்கிறது.

ஒரு தவறை தொடர்ந்து நிகழ்ச் செய்வது பாவமாகும். ஆனால் அதைச் சரி செய்வது நிர்வாகக் கடமை. தற்போதுள்ள ரோஸ்டர் முறையானது விளிம்புநிலை சமூகங்களின் நியாயமான வாய்ப்புகளை நசுக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைக்கப்பட்ட ஏமாற்று முறையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது அமைப்புக்களின் தலைவர்கள், துறைச் செயலாளர்கள் போன்ற முக்கிய பதவிகளில் அவர்கள் நுழைவதைத் தடுக்கிறது.

இது ஒரு அரசியலமைப்பிற்கு இழைக்கப்படும் துரோகம் மற்றும் பல தசாப்தங்களாக தொடரும் அநீதியை உள்ளடக்கியது.

மோசடி குறித்து விசாரணை!

இந்த நியாயமற்ற இடஒதுக்கீடு முறையை முடிவுக்கு கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்த மோசடி குறித்து விசாரணை நடத்தவும், நியாயமான இனசுழற்சி முறையை உருவாக்கவும், பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இடஒதுக்கீடு பெறாத பிரிவுகளைச் சேர்ந்தவர்களை உரிய பிரதிநிதித்துவத்துடன் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்க பிரதமர் அவர்களையும், பணியாளர்கள், ஓய்வூதியங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை இணையமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இக்குழு 1997 -ம் ஆண்டு முதல் பொது வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு ஏற்பட்ட மொத்த இழப்புகளைக் கண்டறிந்து, கூடுதல் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மூலம் இந்த இழப்புகளை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்க வேண்டும். மேலும், குறைந்தபட்சம் எதிர்காலத்திலாவது எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி பிரிவைச் சார்ந்தவர்கள் அரசு அமைப்புகளை வழிநடத்தும் வகையில் நியாயமான மற்றும் சமமான வாய்ப்புகள் இருப்பதை உறுதி செய்வதற்கான தீர்வுகளை முன்மொழிய வேண்டும்.

இவ்வாறு பி.வில்சன் பேசினார்.

## நாடாளுமன்றத் தொகுதிகள் மறு சீரமைப்பு!

### மக்களவையில் - கலாநிதி வீராசாமி கேள்வி!

புதுடெல்லி,மார்ச்.28 -

நாடாளுமன்ற தொகுதிகள் சீரமைப்பு குறித்து மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் பேசியதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 2026 ஆம் ஆண்டு வரை மாற்றக்கூடாது என்றும் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு முடித்த பின்னரே மறு நிர்ணயம் செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தொகுதி மறுசீரமைப்பு குழு (டி லிமிடேஷன் கமிஷன்) பரிந்துரை செய்துள்ளது,



மேலும் கடந்த 15 ஆண்டுகளாக நமது நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை, நாட்டில் ஏன் எதுவும் முறையாக நடப்பதில்லை என்பதற்கான காரணம் தெரியவில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆன்லைன் சூதாட்டங்களை

## ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்போது முழுமையாகத் தடை செய்யும்?

### மக்களவையில் கழகக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி,மார்ச் 28–

தமிழ்நாடு மாநில அரசு ஆன்லைன் சூதாட்ட ங்களை தடை செய்துள்ள நிலையில், ஒன்றிய பாஜக அரசு எப்போது ஆன்லைன் சூதாட்ட ங்களை நாடு முழுவதிலுமாகத் தடை செய்யும் என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் வருமாறு :

* ஆன்லைன் சூதாட்டங்களை தடை செய்வதில் ஒன்றிய அமைச்சர் தார்மீகப் பொறுப்பிலிருந்து பின்வாங்குகிறாரா எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு மாநில அரசு ஆன்லைன் சூதாட்ட ங்களை தடை செய்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) அனைத்து ஆன்லைன் சூதாட்டத் தளங்களையும் தடை செய்ய எவ்வளவு காலம் வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார்.

* ஆன்லைன் சூதாட்டத் தளங்களை தடை செய்வதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு ஆன்லைன் சூதாட்டங்களுக்கு GST விகிதத்தை அதிகரிப்பதிலேயே கவனம் செலுத்துகிறது. இதுதான் உங்கள் அறமா? எனக் கேள்வி எழுப்பினார்.

கடலோர காவல்படை கப்பலுக்கு

## வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்ட வேண்டும்!

### பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு தமிழச்சி தங்கபாண்டியன் கடிதம்!

புதுடெல்லி,மார்ச்‘ 28 -

கடலோர காவல்படை கப்பலுக்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்ட வேண்டும் என, தென்சென்னை நாடளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

சிவகங்கையில் 1730-ம் ஆண்டு ஜனவரி 3-ஆம் தேதி பிறந்த ராணி வேலுநாச்சியார் உத்வேகத்துடன்கூடிய ஒரு ஆளுமை சின்னம். அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் தொடுத்த முதல் இந்திய ராணி ஆவார். ராணி வேலு நாச்சியார் 85 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து தனது ராஜ்ஜியத்தை மீண்டும் பெற்றார். அவருக்கு கடந்த 2008-ம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்டு அவரது வீரம் மற்றும் சுதந்திரப்போராட்ட உணர்வை இந்திய அரசு கவுரவித்தது.

ராணி வேலு நாச்சியாரின் வீரத்தை போற்றும் வகையில் அவரது உருவப்படம் பரவலாக பயணிக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். அதன்படி அவரது நிஜ வாழ்க்கைப்போராட்டம் 62 நாடகக் கலைஞர்களின் பங்கேற்போடு தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறையின் தமிழ்நாடு முழுவதும் நாடகமாக நடத்தப்பட்டது.



தற்போது இந்திய கடலோர காவல்படையின் கப்பல்கள், துணிச்சலான பெண்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் பெண்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. சில கப்பல்களுக்கு ராணி கிட்டூர் சென்னம்மா, ராணி லக்ஷ்மி பாய் போன்ற துணிச்சலான பெண்களின் பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

ஆனால் ராணி வேலு நாச்சியாரின் பெயர் இன்னும் வைக்கப்படவில்லை

எனவே, ராணி வேலு நாச்சியாருக்கு மரியாதை செலுத்தும் வகையில், அவரது பெயரை கடலோர காவல் படையின் விரைவு ரோந்து கப்பலுக்கு சூட்ட வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த கோரிக்கை குறித்து, ஏற்கனவே, நாடளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு 08.02.2023 அன்று கடிதம் மூலமாகவும், 13.02.2023 அன்று மக்களவையில் நேரமில்லா நேரத்திலும் வலியுறுத்தியுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின்

## அனைத்து சேவைகளுக்கும் ஜி.எஸ்.டி. விலக்கு அளிக்க வேண்டும்!

### மக்களவையில் - டி.எம். கதிர் ஆனந்த் வலியுறுத்தல்

புதுடெல்லி,மார்ச்.28 -

நாட்டில் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் அனைத்து சேவைகளுக்கும் ஜிஎஸ்டி விலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி மக்களவையில் ஜீரோ நேர விவாதத்தின் போது வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் வலியுத்திப் பேசினார்.

நாட்டின் கல்வி வளர்ச்சியில் தனியார் கல்வி நிறுவனங்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. பாலர் பள்ளி எல்.கே.ஜி முதல் முனைவர் பட்டப்படிப்பு வரை தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை விகிதம் நாட்டிற்குள் தனியார் கல்வியின் அளவையும் திறனையும் குறிக்கிறது.

இந்நிலையில் நாட்டில் தனியார் கல்வி நிறுவனங்களின் மகத்தான பங்களிப்பு இல்லாமல் இந்தியாவின் மொத்த சேர்க்கை விகிதம் (GER) மிக மோசமாக இருந்திருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக, பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி வரை தனியார் கல்வி நிறுவனங்கள் 18% GST விரி விதிப்புக்கு உட்பட்டுள்ளன. தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடம் இருந்து



வசூலிக்கும் கல்விக் கட்டணம் மற்றும் பிற கல்விச் சேவைகளுக்கு 18% GST விதிக்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்கள், பயிற்சி மையங்கள். தொழிற் கல்வி பயிற்சி வகுப்புகள் மற்றும் தனியார் பயிற்சிகளும் 18% GSTயை ஈர்க்கின்றன. இதில் JEE, NEET, UPSC மற்றும் பிற தொழில் முறை படிப்புகள் போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியும் அடங்கும்.

தொலைதூரக் கல்வி தனியார் ஆன்லைன் கல்வி தளங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களும் 18% GSTக்கு உட்பட்டவை.

சீருடைகள் நோட் புத்தகபைகள் மற்றும் சில வகையான எழுதுபொருட்கள் போன்ற பொருட்களும் 18% GSTயை ஈர்க்கின்றன. இது தவிர வினாத்தாள்கள் விடைத்தாள்கள் மற்றும் அச்சிடப்பட்ட ஆய்வுப் பொருட்கள் போன்ற அச்சிடப்பட்ட பொருட்கள் ஜிஎஸ்டி வரம்பிற்குள் உள்ளன.

கல்வி நிறுவனங்களுக்குள் மாணவர்களுக்கு வழங்கப்படும் கேட்டரிங் (உணவு வழங்கும்) சேவைகளுக்கு 18% ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது. தனியார் கல்வி நிறுவனங்களில் பாதுகாப்பு பராமரிப்பு சேவைகள் வளாகம் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் அனைத்து பாதுகாப்பு பராமரிப்பு சேவைகளுக்கும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது.

வகுப்பறைகள் விடுதிகள் அல்லது நிர்வாகக் கட்டிடங்கள் போன்ற அசையாச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வாடகை வருமானத்திற்கு 18% ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது.

மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்களின் போக்குவரத்துக்கு சேவைகளுக்கும் 5% ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது.

தனியார் கல்வி நிறுவனங்களின் சேவைகளுக்கு ஜிஎஸ்டி வசூலிப்பது மிக கடுமையானது. குறிப்பாக சமூகத்தின் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர் தனியார் கல்வி நிறுவனங்கள் வாயிலாக கிடைக்கும் கல்வி வாய்ப்பு மற்றும் பரவலான கல்விச் சேவைகளை வெகுவாக பாதித்திடும்.

கல்வி சேவைகளுக்கு ஜிஎஸ்டி விதிக்கப்படுவதன் காரணமாக மக்களுக்கு கல்விச் செலவு மேலும் அதிகரிக்கும் அரசு கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற முடியாத தகுதியான மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் வாயிலாக தங்கள் கல்வி வாய்ப்பு பெறுவதை வெகுவாக தடுக்கும் அபாயம் உள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் தரும்கல்விச் சேவைகளுக்கு அதிக ஜிஎஸ்டி கட்டணங்களை வசூல் செய்வது ஏழை எளிய வறிய விளிம்பு நிலை மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவோ அல்லது குறைந்த செலவில் மாற்று வழிகளைத் தேர்வுசெய்யவோ ஊக்கமளிக்காது.

எனவே நாட்டின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் 18% ஜிஎஸ்டி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் ஜீரோ நேரத்தின் போது வலியுறுத்தி பேசினார்.

## தமிழ்நாட்டிற்கு கோதுமை அளவை உயர்த்தி வழங்க வேண்டும் !

### மாநிலங்களவையில் - இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

நாமக்கல், மார்ச் 28-

தமிழகத்திற்கு கோதுமை அளவை உயர்த்தி வழங்க வேண்டும் ! ஒன்றிய அரசு தாய் பறவை போல் நடந்து கொள்ள வேண்டும் என நேரமில்லா நேரத்தில் மாநிலங்களவையில் இராஜேஸ்குமார் எம்.பி பேசினார்.

டெல்லியில் நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத்தொடர் கூட்டத்தில் நேரமில்லா நேரத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசியதாவது தமிழ்நாட்டில் கோதுமை பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரத் தேவையை கருத்தில் கொண்டு தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் ஊட்டச்சத்து மற்றும் வருகையை மேம்படுத்த காலை சிற்றுண்டி உணவுத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் தற்போது 8,576.02 மெட்ரிக் டன் மட்டுமே ஒதுக்கப்படுகிறது, அதே நேரத்தில் மாநிலத்தில் கோதுமை நுகர்வு மாதத்திற்கு 23,000 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலம் இல்லையென்பதால், அது இந்திய உணவுக் கழகத்தின் விநியோகத்தைச் சார்ந்துள்ளது.



கோதுமை ஒதுக்கீட்டை மாதத்திற்கு 23,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ஏற்பாடு செய்யுமாறும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் இது சாத்தியமில்லை என்றால், திறந்த சந்தை விற்பனைத் திட்டத்தின் (OMSS) கீழ் 15,000 டன் கோதுமையை வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறும் ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்

இந்த ஒதுக்கீடு அதிகரிப்பு தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் கோதுமை தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், மாநில மக்களுக்கு மலிவு விலையில் இந்த அத்தியாவசியப் பொருள் கிடைப்பதை உறுதி செய்யும். இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தமிழ்நாட்டின் மீது இந்தியைத் திணித்து, மாநிலத்தின் நிதியை நிறுத்தி வைக்கும் ஒன்றிய அரசின் முடிவும், தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையும் தமிழ்நாட்டின் உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தையும் குறைக்கும் செயலாகும்.

ஒன்றிய அரசு ஒரு தாய்ப் பறவையாக இருக்க வேண்டும், ஒவ்வொரு மாநிலத்தையும் சமமாக மதிக்க வேண்டும் மற்றும் சமமான நிர்வாகத்தின் மூலம் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என இராஜேஸ்குமார் கேட்டுக் கொண்டார்.